**கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட சுதேச மருத்துவக் கல்வி நிறுவகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, சுதேச மருத்துவக் கல்வி நிறுவகமானது 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய கணக்கேடுகளை பேணியிருந்தது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர சுதேச மருத்துவக்கல்வி நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கல்விசார் பதவியணியின் 50 பேருக்காக 2010 திசெம்பர் 31 வரை ரூபா 17,764,292 தொகையான பணிக்கொடை ஒதுக்கீடு செய்யப்பட்டிராததுடன் கல்விசாரா பதவியணிக்காக முன்னைய ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பிடப்படாத குறைவான ஒதுக்கீடுகளும் மீளாய்வாண்டின் போது வருமானச் செலவினக் கணக்கிற்குச் சீராக்கப்பட்டிருந்தன.

(ஆ) மருந்துக்கலவை பாடநெறியின் மீளாய்வாண்டிற்கான போது ரூபா 1,410,000 தொகையான பாடநெறிக் கட்டண வருமானமும் ரூபா 639,164 தொகையான செலவினமும் வருமானச் செலவினக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பாடநெறிக்கான மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த ரூபா 1,581,667 தொகையான வருமானம் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது வங்கிக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 775,488 தொகையான நேரடி செலவு வைத்தல்கள் இனங்காணப்பட்டு குறித்த கணக்குகளுக்கு பதியப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நானாவித வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தன.

(உ) முதலாம் ஆண்டு மாணவர்களுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 300,000 தொகையான மஹாபொல முற்பணத் தொகை 2010 நவம்பர் 18 ஆம் திகதி மீளளிக்கப்பட்டிருந்த போதிலும் அம் முற்பணக் கணக்கை தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 தீர்க்கப்பட்டிராத கணக்குகளின் மீதி

04 நடைமுறைப் பொறுப்புக் கணக்குகளில் பல வருட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 87,031 தொகையான மீதி, 03 வைப்புக் கணக்குகளில் 02 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 534,783 தொகையான மீதி, நிர்மாணிப்பு ஒப்பந்தங்களுக்குரிய 04 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,593,064 தொகையான பாதுகாப்பு வைப்பு மற்றும் "செலுத்தப்படாத பரீட்சைக் கட்டணம்" கணக்கில் பல வருடகாலமாக ஒன்று சேர்த்து காணப்பட்ட ரூபா 127,296 தொகையான மீதி என்பவற்றைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள்

பயிலுனர் விரிவுரையாளர்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகள், பாரம்பரிய அறிவு தொடர்பான கருத்தரங்கு மற்றும் கீழத்தேய மருத்தவ விஞ்ஞான நிதியம் ஆகிய விசேட செயற்பாட்டிற்காக வெளித்தரப்பினரால் சில வருடங்களால் பெறப்பட்ட பணம் மற்றும் அச் செலவினத்தை வேறாக பேரேட்டுக் கணக்குகளில் பதிவதற்குப் பதிலாக நானாவித வைப்புக் கணக்குகளில் பதியப்பட்டிருந்தன.

இக் கொடுக்கல் வாங்கல்களை தெளிவாக இனங்காண முடியாதிருந்தமையால் கணிப்பிட முடியாதிருந்தது.

### 1.2.4 இணக்கம் செய்யப்பட்டிராத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் பின்வரும் கணக்கு விடயங்களை உரிய துணைப்பதிவேடுகள்/ குறிப்புக்களுடன் இணக்கம் செய்யப்பட்டிராமையால் அம் மீதிகள் சரியானவை என்பதனை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| | கணக்கு விடயம் | கணக்குகளின் பிரகாரம் மீதி | துணைப் பதிவேடுகள்/ குறிப்புக்கள் | துணைப்பதிவேடுகள்/ குறிப்பக்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதி | வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | ரூபா | ரூபா |
| (அ) | சரத் ரணசிங்க நிதியம் - முதலீட்டுக் கணக்கு | 60,966 | வங்கி மீதிகளின் உறுதிப்படுத்தல் | 86,264 | 25,298 |
| (ஆ) | இடர் கடன் | 19,162,824 | பட்டோலைகள் | 18,952,910 | 209,914 |
| (இ) | வாகனக் கடன் | 2,271,215 | மேற்படி | 2,251,354 | 19,861 |
| (ஈ) | பதவியணியினர் கடன் | 371,269 | மேற்படி | 325,890 | 45,379 |
| (உ) | கணனிக் கடன் | 913,960 | மேற்படி | 891,500 | 22,460 |
| (ஊ) | விழா முற்பணம் | 265,649 | மேற்படி | 223,800 | 41,849 |
| (எ) | களஞ்சிய முற்பணம் | 884,430 | பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கை | 1,255,494 | 371,064 |

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பின்வரும் விடயங்களை அவற்றிற்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் இல்லாமையினால் அவற்றை திருப்திகரமான முறையில் சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

| | விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இரத்துச்செய்யப்பட்ட காசோலைகள் (2010 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி) | 312,231 | பட்டோலை |
| (ஆ) | பானகல நிதியம் | 10,050 | கோவை |
| (இ) | விடுதி வைப்புக்கள் | 25,000 | கோவை/ வங்கி மீதிகளின் உறுதிப்படுத்தல் |
| (ஈ) | கேள்வி வைப்புக்கள் (மீளச் செலுத்த வேண்டியவை) | 130,256 | முறையான பதிவேடு |
| (உ) | நூலக வைப்புக்கள் | 59,460 | முறையான பதிவேடு |
| (ஊ) | விடுதி வைப்புக்கள் | 180,767 | முறையான பதிவேடு |
| (எ) | நிலையான சொத்துக்கள் (முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் கிரயம்) | 59,141,389 | முறையான பதிவேடு |

**1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டம். | |
| | 109 ஆம் பிரிவு | கணக்காய்வு செய்யப்பட்ட 2009 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | 2001 ஆம் ஆண்டின் போது ரூபா 171,243 தொகையான செலவில் தனியார் நிறுவகம் ஒன்றினூடாகத் தயாரிக்கப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி உதிரிப் பாகங்களும் மென்பொருட்களும் தொடர்பாக வேறான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

(ஊ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் (நி.பி)

| | | |
|---|---|---|
| (i) | நி.பி. 103 | 2009 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட 1303 பொருள் குறைவு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி. 396 | காலாவதியாகி இரத்துச்செய்யப்பட்டு மீள வழங்கப்பட்ட ரூபா 65,688 பெறுமதியான 05 காசோலைகளை இரத்துச்செய்தல் மற்றும் மீள வழங்குதல் ''இரத்துச்செய்யப்பட்ட காசோலைக் கணக்கு'' ஊடாக இடம்பெறவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான கல்வி நிறுவகத்தின் தொழிற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுப்பதற்கு முன்னர் ரூபா 142,942,199 தொகையான பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 122,861,768 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது மீண்டெழும் செலவினத்திற்காகக் கிடைக்கப் பெற்ற ரூபா 104,100,000 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக பற்றாக்குறை ரூபா 38,842,199 வரை குறைவடைந்திருந்ததுடன், முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவிற்காக பெறப்பட்ட ரூபா 106,094,000 அரசாங்க மானியத்தின் காரணமாக அப்பற்றாக்குறை ரூபா 16,767,768 வரை குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகள் ரூபா 22,074,431 ஆல் மேலும் வீழ்ச்சியடைந்திருந்தது.

**2.2 செயற்பாட்டு மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**2.2.1 செயலாற்றல்**

(அ) செயற்பாட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் நான்கு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

i. போதனா வைத்தியசாலைகளின் அறிக்கைகளை நாளதுவரையாக்கல்.

ii. மனோவிஞ்ஞான பாடத்தில் தற்போது நடாத்தப்படுகின்ற செயன்முறைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மீளாய்வு.

iii. செயலாற்றல் மதிப்பீட்டுச் செயன்முறையை மேலும் ஆக்கபூர்வமாக்குதல்.

iv. மருத்துவப் பயிர்களின் பாதுகாப்பிற்காக ஒரு குழுவை நியமித்தல்.

(ஆ) கல்வி நடவடிக்கைகள்

ஆயுர்வேத மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை மற்றும் யுனானி மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சை பட்டப் படிப்பு பாடநெறிகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) பட்டப் படிப்பு பாடநெறியின் பாடவிதானம் 1983 ஆம் ஆண்டின் பின்னர் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) கல்வி ஆண்டின் ஆரம்பத்தில் ஒவ்வொரு பாடங்களுக்குமான முறையான கற்பித்தல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மொத்தமாக 31 பாடங்களைக் கொண்ட ஆயுர்வேத பாடநெறியில் 28 பாடங்களின் ஒவ்வொரு பாடத்திற்கும் 2 விரிவுரையாளர்கள் முதல் 8 விரிவுரையாளர்கள் வரை ஈடுபடுத்தப்பட்டிருந்த

போதிலும் ஒவ்வொரு விரிவுரையாளர்களுக்குமான பாடங்கள் முறையாக ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை சில சிரேஷ்ட விரிவுரையாளர்கள் செயன்முறை பயிற்சி நடவடிக்கைகள் உள்ளடங்கலாக கல்வி நடவடிக்கைகளுக்காக குறைவான பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

(iv) மாணவர் வரவுப் பதிவேட்டினைப் பேணலில் முழுமையற்ற தன்மை மற்றும் ஒழுங்கீனத்தின் காரணத்தினால் பாடவிதானங்கள் முழுமையாகப் பூர்த்தியாக்கப்பட்டன என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) 29 வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவை பெறப்பட்டிருந்த போதிலும் முறையான செயல் ஒப்படைப்பும் உரிய கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் பாடநெறிகளைத் திருப்திகரமாக பூர்த்திசெய்யாது கல்வி நடவடிக்கைகளை விட்டுச் செல்லும் நிலையும் பரீட்சையில் தோல்வியுறும் நிலையும் கடந்த சில ஆண்டுகளில் அதிகரிததுக் காணப்பட்டதுடன் இது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் கோரப்பட்டிருக்கவில்லை.

| சேர்த்துக் கொள்ளப்பட்ட கல்வி ஆண்டு | சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர் எண்ணிக்கை | 5 ஆம் ஆண்டளவில் இருந்த மாணவர் எண்ணிக்கை | 5 ஆம் ஆணடில் சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை | சதவீதம் % |
|---|---|---|---|---|
| 2003/2004 | 102 | 67 | 45 | 44 |
| 2003/2004(A) | 78 | 62 | 50 | 64 |
| 2002/2003 | 95 | 86 | 63 | 66 |
| 2001/2002 | 101 | 80 | 58 | 57 |
| 2000/2001 | 98 | 54 | 43 | 44 |
| 1999/2000 | 114 | 73 | 53 | 46 |

**2.2.2 முகாமைத்தவ திறமையீனங்கள்**

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாணவர் உதவிப்பணம் மற்றும் மஹாபொல கொடுப்பனவுகள்

---------------------------------------------------------------------------------------------------

(i) 2009/2010 கல்வியாண்டின் போது ஆர்வத்துடன் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிராத பத்து மாணவர்களுக்காக சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக தொடர்ந்தும் மாணவ உதவிப் பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் இவர்களில் மூன்று பேர் 2008/2009 கல்வியாண்டில் பரீட்சைகளுக்காக தோற்றியிருக்கவில்லை.

(ii) மாணவ உதவிப்பணமும் மஹபொல பணமும் செலுத்தப்பட்டிராத மாணவர்களுக்காகவும் ஆணைக்குழுவினால் அந் நிதி மீளளிக்கப்பட்ட காரணத்தினால் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிராத மாணவ உதவிப்பணக் கணக்கில் ரூபா 1,415,900 தொகையும் செலுத்தப்பட்டிராத மஹபொல கணக்குகளில் ரூபா 129,550 தொகையும் மீதியாகியிருந்தன. இதற்கான விபரமான பட்டோலையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மஹாபொல மற்றும் மாணவ உதவிப் பணம் தொடர்பாக குழு ஒன்று நிமிக்கப்பட்டு மாதாந்த முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டடிருக்கவில்லை.

(ஆ) ஆயுர்வேத/ யூனானி முதுமானிப்பட்ட கற்கைநெறிகள்

------------------------------------------------------------------------------------

இந்த முழு நேர பாடநெறிக்காக பாதீடும் செலவின அறிக்கையும் தயாரிக்கப்பட்டிராததுடன், உதவிப் பதவியணியினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக முன்னராகவே இனங்கண்டும் செய்த வேலைகள் தொடர்பாக உறுதியான சான்றுகள் இல்லாமலும் நிறுவகத்தின் 9 பிரிவுகளில் இனைத்துக்கொள்ளப்பட்டிருந்த 84

உத்தியோகத்தர்களுக்கு பாடநெறிகளுக்கு உதவிசெய்தல் படியாக ரூபா 630,900 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நூலக அபிவிருத்தியும் பேணலும்

-----------------------------------------------------

(i) மீளாய்வாண்டின் போது பாதீடு செய்யப்பட்ட ரூபா 1,500,000 தொகையும் பட்டப்பின் படிப்பைப் பின்பற்றுபவர்களிடம் இருந்து அறவிடப்பட்ட ரூபா 272,000 தொகையும் நூலக அபிவிருத்திக்காக ஆக்கபூர்வமாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. திறைசேரி அங்கீகாரத்துடன் இந்த ரூபா 1,500,000 தொகை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக மாற்றப்பட்டுள்ளதாக பணிப்பாளர் அறிவித்திருந்தார்.

(ii) சுற்றறிக்கையின் பிரகாரம் நூலகப் புத்தகங்கள் தொடர்பான வருடாந்த இருப்பு மெய்மையாய்வு தொடக்கத்திலிருந்து மீளாய்வாண்டு வரை மேற்கொள்ளப்பட்டிராததுடன் நூலகக் களஞ்சியத்தில் காலாவதியான மற்றும் சேதமுற்ற நூலகப் பொருட்கள் குவிக்கப்பட்டிருந்தன.

(ஈ) புலமைப்பரிசில்களும் மானியங்களும்

------------------------------------------------------------

கீழைத்தேய மருத்தவ விஞ்ஞான நிதியத்தின் மூலம் 2008/2009 கல்வியாண்டிற்காக வழங்கப்பட்ட ரூபா 25,000 தொகையான பரிசுப் பணம் உரிய மாணவர்களுக்கு வழங்கப்படுவதற்கு 2009/2010 கல்வியாண்டிற்குரிய பரிசுப் பணத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிலுவையான ஊழியர் கடன்

--------------------------------------------

(i) 06 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 01 வருடம் 04 மாதங்கள் முதல் 08 வருட காலம் வரை நிலுவையாகக் காணப்பட்ட ரூபா

1,044,815 தொகையான ஊழியர் கடனை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இரு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 60,000 தொகையான கணனிக் கடனை அறவிடுவதில் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு மாறாக 08 மாதங்கள் முதல் 09 மாதங்கள் வரையான தாமதம் ஏற்பட்டிருந்தது.

**2.2.3 நலிவான நிதிக் கட்டுப்பாடு**

---

(அ) நிறுவகத்தில் நிலவும் நலிவான நிதிக் கட்டுப்பாடுகளின் காரணமாக சேகரிப்புகளை வங்கியில் வைப்புச்செய்வதில் குறிப்பிடத்தக்க காலதாமதமும், நாளாந்த சேகரிப்புக்களைப் பார்க்கிலும் கூடுதலாக வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு மறுநாள் பணச் சேகரிப்புடன் ஈடுசெய்யப்படுவதுடன் சிறாப்பரின் நாளாந்தப் பெறுவனவுப் புத்தகமும் பணத்தை வங்கியில் வைப்புச்செய்தல் தொடர்பாக மேற்பார்வை இடம்பெறவில்லை.

(ஆ) 02 வங்கிக் கணக்குகளில் ஒரு வருடத்திற்கு மேலான ரூபா 4,027 உள்ளடங்கலாக ரூபா 17,854 தொகையான இனங்காணப்படாத 08 தேறாத வைப்புக்களும் ஆராய்ச்சி வங்கி நடைமுறைக் கணக்கில் 09 மாதங்களுக்கு முன்னர் வரையப்பட்ட எனினும் உரிய கொடுப்பனவாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிராத ரூபா 9,100 பெறுமதியான 09 காசோலைகளும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தன.

**2.2.4 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

---

(அ) வங்கி நடைமுறைக் கணக்குகளில் விளைவற்று பணம் உள்ளமை

---

(i) மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட மாதாந்த மூலதன செலவினம் ரூபா 50,850 இற்கும் ரூபா 1,543,700 இற்கும் இடையே காணப்பட்ட போதிலும் அதற்கான வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 3,819,000 தொகையான சராசரி மாதாந்த பண

மீதி நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக் கணக்கின் மீதி ரூபா 5,656,120 ஆகக் காணப்பட்டது.

(ii) உலக சுகாதாரச் சங்கத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 665,772 தொகை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது 2006 ஆம் ஆண்டு முதல் விளைவற்று வங்கி நடைமுறைக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) விளைவற்ற சொத்துக்கள்

18 வகைகளைச் சார்ந்த ரூபா 65,709 பெறுமதியான 4,120 பொருட்கள் பல வருட காலமாக வழங்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வழக்குக் கட்டணக் கொடுப்பனவு

நிறுவகத்தலைவர் உள்ளடங்கலாக உத்தியோகத்தர்களுக்கு எதிராக தொடரப்பட்ட இரு வழக்குகளுக்காக தாபன விதிக்கோவையின் XXXIII ஆம் அத்தியாயத்தின் 5 மற்றும் 6 ஆம் பந்திகளின் பிரகாரம் சட்டமா அதிபரிடம் இருந்து அறிவுறுத்தல்கள் பெறப்படாது தனியார் சட்டத்தரணிகளுக்கு ஒப்படைக்கப்பட்டு வழக்குக் கட்டணமாக ரூபா 420,693 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் கடந்த ஆண்டின் போது முடிவுற்ற வழக்கிற்காகவும் இவ்வாறே செயற்பட்டு தனியார் சட்டத்தரணிகளுக்கு ரூபா 496,250 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு மாறாக வழமையான கடமைகளுக்காக மாதம் ஒன்றிற்கு 20 மணித்தியாலங்களுக்கு மிகையாக 23,153 மணித்தியாலங்களுக்கு ரூபா 2,711,343 தொகையான நேர வேலைப் பணம் 70 பேர் கொண்ட கல்விசாரா உத்தியோகத்தர்களின் 66 பேருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------

(அ) (i) மீளாய்வாண்டின் போது 08 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,230,889 பெறுமதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவு தொடர்பாக கேள்விகளைக் கோரல் கேள்விகளைப் பொறுப்பேற்றல் மற்றும் கேள்விகளைத் திறத்தல் என்பன அரசாங்க கொள்வனவு வழிக்காட்டிக் கோவையின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக இடம்பெற்றிருந்ததுடன் அப் பொருட்களின் தரம் தொடர்பாக தகமைபெற்ற நபரின் சான்றுபடுத்தல் இன்றி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) ரூபா 723,330 பெறுமதியான 04 வகையான பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவிற்காக விடயம் தொடர்பான நிபுணத்துவம் பெற்ற தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டு அதன் பரிந்துரை பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முற்பணம்

-------------

விடுதியின் கழிவு நீர்க்குழாய் முறைமையை திருத்தியமைப்பதற்காக 2010 ஒக்டோபர் 18 ஆம் திகதி உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 30,000 முற்பணத் தொகையில் உரிய செயற்பாடு மேற்கொள்ளப்படாது 2011 மார்ச் 15 ஆந் திகதி மீளத் தீர்க்கப்பட்டிருந்தது.

### 2.2.7 செயற்பாட்டுத் திட்டம்

------------------------------------

2010 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிற்காக செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன் இறுதி அரையாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த திட்டம் 2003 யூன் 12 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்திக்கு மாறாக பூர்த்தியாகாத நிலையில் காணப்பட்டது.

### 2.2.8 செயற்திறன் அறிக்கை

அச் சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்திறன் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.9 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் செலவினத்திற்கு இடையே நிலவிய குறிப்பிடத்தக்க அளவான வேறுபாட்டின் காரணமாக பாதீடு சிறப்பான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஆ) பொருள் இருப்பு பதிவேடுகள் பேணப்படுதல்
(இ) நிதியக் கட்டுப்பாடு
(ஈ) திட்டமிடலும் பாதீட்டுக் கட்டுப்பாடும்
(உ) மேலதிக நேர வேலை மற்றும் பதவியணியினருக்கான கொடுப்பனவுகள்
(ஊ) முற்பணங்கள்
(எ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்
(ஏ) புலமைப்பரிசில் வழங்குதல்
(ஐ) கல்வி நடவடிக்கைகள்
(ஒ) கொள்வனவு நடவடிக்கைகள்
(ஓ) ஊழியர் கடன் அறவிடப்படுதல்
(ஔ) நூலக அபிவிருத்தி
(க) மாணவ உதவிப்பணம் மற்றும் மஹாபொல கொடுப்பனவுகள்